மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஏற்பட்டால் சென்னையில்தான் அதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் தலைமையிடம் சென்னையில்தான் அமையும்.

தஞ்சை மாவட்டத்திற்குப் பொறியியல் கல்லூரி

*312 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஓர் பொறியியல் கல்லூரி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம்

*313 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் தலைவர், 26—9—1970 தேதியில் பெண் உறுப்பினர் தேர்தல் நடத்தி, பெண் உறுப்பினரைத் தேர்ந்து எடுத்தது செல்லாது என கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் 26—9—1970-ல் நடந்த பெண் உறுப்பினர் தேர்தல் கூட்டத்தில் திருமதி சண்முக வடிவு அம்மாள், 9 ஓட்டு களும், மற்றொருவரான திருமதி மாகதம்மாள் 7 ஓட்டுக்களும் பெற்றிருப் பதாகவும், ஆகவே, திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப் பட்டதாக, பேரூராட்சியின் தலைவர் அறிவிக்க, இத்தேர்தலை எதிர்த்துப் பேரூராட்சியின் உபதலைவரும், மற்றும் ஏழு உறுப்பினர்களும் வழக்குப் போட்டார்கள். திருமதி சண்முகவடிவு அம்மாளும், திருமதி மரகதம்மாளும், முறையே எட்டு ஓட்டுக்கள் பெற்றிருப்பதால் திருமதி சண்முகவடிவு அம்மாளைத் தேர்ந்தெடுத்தது செல்லாது எனவும் சட்ட திட்டங்களுக்குட் பட்டுப் புதிய பெண் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் அம்பா சமுத்திரம் மாவட்ட முன்சிப் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.